* தரமான வர்ணப் புகைப்படப் பிரதிகள்
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
பெற்றுக்கொள்ள
ஆர்த்தி ஈவனிங்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 28628

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ. 1/=

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

எழிலுமிகு வெற்றிகளைக் கட்டுங்கோ
வர்ண புகைப்படத்திற்கு நற்பெயரும், தரமான
Sakura - Fuji - Kodak - Tudor
வர்ணப் புகைப்படச் சுருள்களைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஆர்த்தி ஈவனிங்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
தொலைபேசி: 28628

வெளியீடு 1 யாழ்ப்பாணம் அலுவலகம் ஞாயிறு வைகாசி மீ 7 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 றம்ழான் பிறை 11 (21-05 1986) UTHAYAN A DIVERSE TAMIL DAILY விலை: 157

போராளிகள் எதிர்ப்பால் குடாநாட்டில் இராணுவம் பின்வாங்கியது!

தற்காலிகப் பின்னடைவே என்று அதிகாரி ஒருவர் தகவல்

கொழும்பு, மே 21

போராளிகளின் நடும் எதிர்ப்பால் யாழ் குடாநாட்டில் தொடர்ந்து முன்னேற முடியாது இராணுவம் பின்வாங்கியது.

இப்படி பாதுகாப்பு வட்டார உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது.

இது ஒரு தற்காலிக பின்னடைவே என்றும் அந்த அதிகாரி சொன்னதாக ராய்ட்டர்' செய்தி ஸ்தாபனம் மேலும் அறிவித்தது.

இதற்கிடையில் பாதுகாப்பு வட்டாரங்கள் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

யாழ் – கண்டி வீதியில் பலாலி அருகே ஏற்பட்ட நீண்ட வாகன அணிவகுப்பு இராணுவம் ஆயுதங்களுக்குத் திரும்பிச் சென்றது.

பலாலியில் இருந்து இராணுவம் வரவழைக்கப்பட்டு முன்னேறியது. வயாவிளாவில் முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பட்டினத்தில் இராணுவ முகாம் ஒன்று புதிதாகத் திறக்கப்பட்டது. கடற்படை முகாமுக்கு உதவியாக இந்த இராணுவ முகாம் இயங்கும்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ் நகரில் நடந்த பொம்மர் விமானத் தாக்குதலில் முற்றாக எரிந்த சேதமடைந்த சிவகோரன் ஸ்ரோர்ஸ்.

பருத்தியடைப்பிலும் பொம்மர் குண்டுவீச்சு ஷெல் தாக்குதல்கள்

நல்லூர், மே 21

பருத்தியடைப்பு பகுதியிலும் நேற்று பொம்மர் மற்றும் 'ஷெல்' தாக்குதல்கள் நடத்தினர். பொம்மர் விமானமும் இவர்களுக்கு உதவியாக குண்டுகளை வீசியது.

இச்சம்பவம் கவிஞர் காசிஆனந்தன் வசித்த வீடு உட்பட வலிகாமப்பகுதியில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது:—

நேற்று முன்தினமும், நேற்றும் நூற்றுக்கு மேற்பட்ட பொம்மர்கள் படகு மூலமாகவந்து பருத்தியடைப்பு பகுதியை முற்றுகையிட்டனர்.

இதனைஅடுத்து போராளிகள் பொம்மர்களை நோக்கி தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இரண்டு தரப்புக்கும் இடையில் நேரடி மோதல் நடைபெற்றுக் கொண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

2 ஆம் நாளாக யாழ் நகரில் குண்டுவீச்சு!

அலுவலகங்கள் மூடப்பட்டன நகரம் வெறிச்சோடியது

— அலுவலகச் செய்தியாளர் பி. வனிதராஜன் —

யாழ்ப்பாணம், மே 21

யாழ் நகரில் நேற்று இரண்டாவது நாளாக பொம்பர் விமானங்கள் குண்டுகளை வீசின. ஹெலிக்கொப்டர் சூடும் இடம்பெற்றது. ஆனால் நேற்று முன்தினம் நடந்த முதலாவது தாக்குதலைப் போல் அறிவிப்பு நேரத்தில் தாக்குதல் முடிவடைந்தது உயிர்ச் சேதம் எதுவும் இல்லை.

சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:

நேற்றுக் காலை சுமார் 10.30 மணி அளவில் இரண்டு ஹெலிகொப்டர்கள் யாழ் நகரைச் சுற்றி வட்டமிட்டன. திடீரென வானில் முகாமிலிருந்து வந்த இரண்டு பொம்மர் விமானங்கள் ஒரே நேரத்தில் யாழ் நகரை சுற்றி வட்டமிட்டன. திடீரென பொம்மர் விமானம் மூன்று குண்டுகளை வீசியது

(4– ஆம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக மாணவர்கள் வெளிநடப்பு

யாழ்ப்பாணம், மே 21

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுக் காலை 12 மணியளவில் வகுப்புப் பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்தனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அரச அதிகாரிகள் இராணுவ அதிகாரிகள் சந்திப்பு நடக்கவிருந்தது

யாழ்ப்பாணம், மே 21

கூட்டுத்தலைமை சிறிலங்கா இணைப்பதிகாரி பிரிகேடியர் ரூபசிங்கா ஆகியோர் யாழ்ப்பாண அரச அதிபர் மற்றும் நிர்வாகத் தலைவர்கள், கட்டுத்தாபனத் தலைவர்கள் ஆகியோருக்கும் இடையில் நடக்க இருந்த சந்திப்பு நேற்று இடம்பெறவில்லை.

நேற்றுக் காலை கூட்டுத் தலைமை சிறிலங்கா இணைப்பதிகாரி பிரிகேடியர் ரூபசிங்கா ஆகியோர் கொண்டு வந்த ஹெலிகொப்டர் யாழ் கோட்டை முகாமுக்கு இங்கிருந்தவாறே திரும்பிச் சென்றது

யாழ் அரச அதிபர், (4 ஆம் பக்கம் பார்க்க)

ஷெல் தாக்குதலினால் காயம் அடைந்த ஜோசப் இருதயராணி (வயது 21) ஜோசப் மரியராணி (வயது 22) இதயவரும் இரட்டையர்கள். யாழ் நகரில் வசிக்கும் ஒருவரோடு ஷெல் விழுந்தது.

இந்திய உதவி இல்லாமல் இனப்பிரச்சினையை ஒருபோதும் தீர்க்கவே முடியாது

சரத்தின் இறுதிப்பேச்சு

கொழும்பு, மே 21

இந்தியாவின் உதவி விடுதலை இனப்பிரச்சினையை ஒருபோதும் தீர்க்க முடியாது.

இப்படி கலாநிதி எரிக். சரத் முத்தெட்டுவேகம இரத்தினபுரியில் நடந்த சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி வாலிபர் சங்கக் கட்டம் ஒன்றில் பேசுகையில் சொன்னார்.

கடந்த ஞாயிறு மாலை இக் கூட்டத்தில் பங்கு பற்றி உரை நிகழ்த்தி விட்டு ஜீப்பில் திரும்பு கையிலேயே திரு. சரத் முத்தெட்டுவேகம விபத்தில் சிக்கி அகாலமரணமானார்.

அவரின் இறுதிப் பேச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வயாவிளான் மகாவித்தியாலய பகுதியைச் சுற்றி குண்டுவீச்சு

பலாலி, மே 21

இராணுவ முகாமாக மாற்றப்பட்ட வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தைச் சுற்றி 'பொம்மர்' விமானங்கள் 6 குண்டுகளை வீசின. நேற்றுக் காலை இரவு இச்சம்பவம் நடந்தது.

பொம்மரின் குண்டுவீச்சுக்கு முன்னும் பின்னும் ஹெலிக்கொப்டரில் வந்த நான்கு ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

சுமார் 30 நிமிடங்களாக தொடர்ச்சியாக நடந்த இத்தாக்குதல் ஆப் பகுதிமுழுவதையும் அதிரவைத்தது.

வானத்தாக்குதல் முடிவுற்றதும் மகாவித்தியாலய முகாமில் இருந்து தொடர்ந்து துப்பாக்கி வாணம் நாலாதிசையும் வீசப்பட்டது.

இத்துப்பாக்கிச் சூட்டுக்களில் காயமடைந்த 5 பேர் அந்தலை அரசினர் வைத்தியசாலைக்கும் தனியார் வைத்தியசாலைக்கும் எடுத்து வரப்பட்டனர்.

வயாவிளான் மகாவித்தியாலயத்தைச் சுற்றியுள்ள பகுதி வெளிகள், தோட்ட வெளிகள், பற்

(4 ஆம் பக்கம் பார்க்க)



ஹெலிகொப்டர் சூட்டினால் மரணமடைந்த அரிகரகுட்டி குமாரசாமியின் (73 வயது) சடலம். இவர் யாழ் முன்றும் குறக்குத் தெருவைச் சேர்ந்தவர்.

யாழ்ப்பாண விமானத் தாக்குதல்கள் குறித்து இந்தியா கண்டனம்

சிவ்சங்கரின் பிரேஸில் பயணம் ரத்து

புதுடில்லி, மே 20

யாழ்ப்பாணத்தில் திங்கட்கிழமை நடந்த விமானத் தாக்குதல் குறித்து இந்தியா கண்டனம் வெளியிட்டுள்ளது.

அதேவேளை, பிரேஸில் செல்லவிருந்த வெளியுறவு அமைச்சர் திரு. பி. சிவ்சங்கரின் பயணம், கோபமடைந்து வரும் இலங்கை நிலைமையை முன்னிட்டு ரத்துச் செய்யப்பட்டது.

திரு. சிவ்சங்கர் பிரேஸிலில் நடக்கவிருக்கும் '77 குரூப்' நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ளுவதற்காக நேற்று (திங்கள்) புறப்பட்டுச் செல்லவிருந்தார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள புதிய கோரமான நெருக்கடி நிலைமையைத் தொடர்ந்து திரு. சிவ்சங்கர் தனது பிரேஸில் பயணத்தை ரத்துச் செய்து விட்டார் என்று அமைச்சர் விக்கிரநாத் பிரதாபசிங் இப்போது பிரேஸில் சென்றிருக்கிறார்.

இதனிடையில் யாழ்ப்பாணத்தில் கடந்த திங்கட்கிழமை நடந்த விமானத் தாக்குதலைக் கண்டித்து இந்தியா வெளியிட்ட கண்டன அறிக்கையை வெளிநாட்டமைச்சர் சிவ்சங்கரே வாசித்தார்.

பிரதமர் ராஜீவ் காந்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

அப்ப பிக்னே உண்மையை ஒப்புக்கொள்ளுற வெருந்தன்மையும் பெரிய மனசுமில்லாதுக்கு ஏண்டு சொல்லுங்கோவேன் ...!

கொட்டடியில் மூவர் பலி

சடலங்களை அப்புறப்படுத்த முடியாத நிலை

நல்லூர், மே 21

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சம்பவங்களை பார்க்கச் சென்ற முதியவர் ஒருவரும், மீன் பிடிப்பதற்குச் சென்ற இரண்டு மீனவர்களும் பொலிஸ்களின் சுட்டுக்கொலைக்கு பலியானார்கள்.

இச் சம்பவம் நேற்றுக் காலை ஆறு மணியளவில் நடந்தது.

சம்பவம்பற்றி அறிய வருவதாவது:—

நேற்றுக்காலை மீன்பிடிப்பதற்காக இரண்டு மீனவர்களும் மற்றும் முஸ்லிம் நபர் ஒருவரும் கொட்டடி மீனாட்சி அம்மன் ஆலயத்தற்காகவே நடந்து சென்றுகொண்டிருந்தனர்.

அப்பொழுது யாழ். கோட்டை முகாமிற்கு அருகேயுள்ள பொலீஸ் விடுதியில் தங்கியிருந்த பொலிஸார் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் இவர்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

செல்லி அம்பலப்பேரும்பேர இவர்களது சடலங்கள் அகற்றப்படவில்லை

சடலங்களை அகற்றச் சென்றோர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுவதால் எவரும் சடலங்களுக்கு அருகே செல்ல முடியாத நிலை இந்த நாளிலும் நிலவுகிறது.

கொழும்பு மோதலில் மூவர் பலி!

கொழும்பு, மே 21

கொழும்புவெள்ளவத்தை தெருவில் நேற்று இரவு ஆயுதப் படையினருக்கும் குடி மக்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் மூவர் கொல்லப்பட்டனர் 15 பேர் காயம் அடைந்தனர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் ஆயுதப் படையைச் சேர்ந்தவர் என்று நம்பப்படுகிறது.

வியாபாரம்

சுபநேரம்

21-05-1986
புதன்கிழமை

சுபநேரம்:
04.22 முதல் 05.52 வரை
ராகுகாலம்:
11.52 முதல் 1.22 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பிரதோஷ விரதம்

நேரம்	
சஹர்:-	4.18
ஸுபுஹ்:-	5.21

இளைய தலைமுறையினரை இருமடங்கு ஈர்க்கும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வூதியம் தாமதம்

ஆசிரியர் பாதிப்பு

இடைக்கால ஓய்வூதியம் மூலம் குடும்பம் நடத்த முடியாத நிலை

வட்டுக்கோட்டை, மே 21
யாழ். மாவட்டப் பாடசாலைகளிலிருந்து இளைப்பாறிய ஆசிரியர்களுக்கான ஓய்வூதியத்தைப் பெறமுடியாத நிலையிருக்கின்றது.

இடைக்கால ஓய்வூதியமாக சுமார் நான்கு மாதங்களாக மாதந்தோறும் பெறும் இவர்கள் தமது குடும்பத்தைக்காப்பாற்ற முடியாதுமெத்தக் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

சில ஊழியர்களுக்கும் மாதந்தோறும் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுக்கான 504 ரூபாவிலும் பார்க்க தாம் குறைவாகவே இடைக்கால ஓய்வூதியத்தைப் பெற்று வருவதாக இவர்கள் தெரிவித்தனர்.

ஓய்வூதியத்துடன் இந்த 504 ரூபாவை சேர்த்து இரண்டொரு மாதத்திற்காவது தாம் ஓரளவு வாழ்க்கைச் செலவைச் சமாளித்துக்கொள்ள முடிவுகொண்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

யாழ் மாவட்டப் பாடசாலைகளிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களது ஓய்வூதியத்தை இரண்டொரு மாதங்களில் முழுமையாக வழங்க வாழுகல்விப் பணிப்பாளர் துரித நடவடிக்கை எடுப்பார் என ஆசிரியர்கள் எதிர்பார்க்கின்றனர்

ஆலங்கேணியில் தேடுதல்

திருகோணமலை, மே 21
திங்கள்கிழமை ஆலங்கேணி கிராமத்தைச் சுற்றி வளைத்த ஆயுதப் படையினர் தேடுதல் நடத்தினர்.

சிறிமா சீனா பயணம்

கொழும்பு, மே 21
சனாதிபதி ஜயவர்த்தனவின் அழைப்பை ஏற்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா சனிக்கிழமை சீனாவுக்குச் செல்வார்.

சீனத் தலைவர்களின் அழைப்பை ஏற்று திருமதி பண்டாரநாயகா செல்வார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து திருமதி பண்டாரநாயகாவுக்கு பிரியாவிடையளித்த சோமவீர இடம் கூறினார்.

மக்கள் முகம்

சென் மேரிஸ் விழிப்புக்குழு

யாழ்ப்பாணம், மே 21
பண்டத்தரிப்பு சென் மேரிஸ் பங்கு மக்கள் விழிப்புக் குழுவின் தலைவராகப் பிரகருபொர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: தா. அருளானந்தம், உபதலைவர்: அ. ஜே குணசிங்கம், செயலாளர்: இ. சி. கிறாஸிலோன், உபசெயலாளர்: இ. டேவிற், பொருளாளர்: இ. இராஜரட்ணம், மி. ஆலோசகர்: மி. ஆரோக்கியநாதர் ஆரோக்கியராஜா கொண்ட விசாரணைக் குழுவும், மூவர் கொண்ட நிர்வாக அங்கத்தவர் குழுவும் தெரிவு செய்யப்பட்டன.

மாதமொரு நெஸ்பிறே

மண்டைதீவு, மே 21
மண்டைதீவுப் பகுதியிலுள்ள ஒரு வறுமைக்குட்பட்ட குழந்தைகளுக்கு நிதி காலத்துக்கு நெஸ்பிறே மா பக்கட் ஒன்று மாதம் ஒரு முறை வழங்கப்படவிருக்கின்றது.

இதற்கான நிதியை யாழ் மாவட்ட ஆசிரியர் சபை அண்மையில் ஒதுக்கீடு செய்துள்ளது.

பொலீஸ் தாக்குதலில் 1 முஸ்லிம் மரணம் 7 பேர் காயம்

கொழும்பு, மே 21
கொழும்பு, புதுக்கடைப்பகுதியில் ஞாயிறு இரவு பொலீஸார் நடாத்திய குண்டாந்தடி, கண்ணீர்ப்புகைத் தாக்குதலில் ஒரு முஸ்லிம் மரணம் அடைந்தார். எழுவர் காயம் அடைந்தனர்.

அவர்களில் ஒருவர் நிலைமை மரண மானார்.

இதைத் தொடர்ந்து புறக்கோட்டைப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது.

ஞாயிறு இரவு ஆப்பம் விற்பனையாளர்களுக்கும் பொலீஸாருக்குமிடையே நடந்த தாக்குதலில் இரண்டு பொலீஸார் காயமடைந்தனர். அதைத் தொடர்ந்தே பின்னர் பொலீஸார் கண்ணீர்ப் புகை, குண்டாந்தடித் தாக்குதலில் ஈடுபட்டனர்.

வயாவிளான் ஆசிரியர்களுக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், மே.21
வயாவிளான் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர்கள் இன்று 21ஆம் திகதி உருத்திராட்சை தமிழ் வித்தியாலயத்தில் கடமையாற்றுகின்றார்கள்.

இன்று காலை 10 மணிக்கு அங்கு கடமையாற்ற பிரஸ்தாப மகாவித்தியாலய ஆசிரியர்களை யாழ் கல்விப் பணிப்பாளர் கோரி உள்ளார்.

வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபருடன் இந்தச் சந்திப்பு நடைபெறும்.

ஆரம்ப காலத்தைப் பற்றி சொல்கிறார் முத்துராமன்

தமிழ்த் திரையுலகில் புகழ்பெற்ற,பெற்றிப்பட இயக்குனர்களில் ஒருவர் என் பி முத்துராமன் ஏ. வி. எம் என்றழைக்கப்படும் கலைஞர் ஆரம்பக் காலத்தில் உருவாக்கப் பட்டவர் இவர்.

பலராலும் பாராட்டப்பட்ட, பாராட்டப்பட்டு வெள்ளி விழா கண்டபடமான ஏ. வி. எம்மின் "சகல கலாவல்லவன்" இவர் இயக்கிய ஆரம்பகால படங்களில் ஒன்று

அவர் தமது ஆரம்பகால படங்களைப் பற்றி சொல்கிறார்.

எனது படைப்புகளில் வெளிவந்தமுதற்படம் 'கனிமுத்துப் பாப்பா' அன்றே நடிகர்களைக் காணத்தூண்டிய படம் 'எங்கிருந்தோ வந்தாள்.'

கமலஹாசனுடன் என்னுடைய முதல் தொடர்பு "தாயைத் காப்பு கண் சிமிட்டுகிறது".

என்னுடைய முதல் வார்ப்படம் 'துணிந்த தெய்வம்', ரஜனி காந்தும் நானும் இணைந்து புதுவித 'கேள்வி குறிகளை'

கவிஞர் வாலி, ரிஷி மூவரும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனோடு நான்கு இணைந்து உழைத்து உருவாக்கிய படங்கள்.

எனக்கு முதல் வெளிநாட்டுப் பயணத்தைப் பெற்றுத் தந்தது ட்ரிவா. ஆறிலிருந்து அறுபது வரை, எங்கேயோ கேட்ட குரலும் என்னுடைய மறுபக்கத்தை வெளிச்சம் போட்டுக் காட்டின.

ஏ வி எம் நிறுவனம் தொடர்ந்து படம் எடுக்கத் தூண்டுகோலாக இருந்தது முரட்டுக்காளை

நீண்ட இடைவெளிக்குப்பின் கமலஹாசனுடன் பணியாற்றிய வாய்ப்புக் கிடைத்தது 'சகலகலா வல்லவன்' படத்தில்.

இயக்குனர் விக்கிரமன் தான் நடிகராகிய படம் 'குடும்பம் ஒரு கதம்பம்' பின் 'நல்லவனுக்கு நல்லவன்' என்றார்.



வருங்காலத்தை பெண்களே உருவாக்குகிறார்கள்

வேம்படியில் சுவாமிகள் உரை

யாழ்ப்பாணம், மே 21
மனிதனை மனிதன் அறிவதற்கு உரிய ஆன்மீகச் சூழலை கல்வி ஆகும். எனவே கல்வி மூலம் வருங்காலத்தை நாம் அறிவூட்டவும் வகை செய்து கொள்கின்றோம் பெண்கள் வருங்காலத்தை உருவாக்குகின்றார்கள். அவர்களுக்கு ஒழுக்கம் இன்றியமையாதது ஒழுக்கம் இல்லையெனில் ஆற்றலும் அற்று விடுகிறது.

இவ்வாறு வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் மத்தியில் சிறப்புரையாற்றிய திருநெல்வேலி ராமகிருஷ்ணன் ஆச்சிரமம் சுவாமி தயாநிருபேந்திரா தெரிவித்தார்.

ஆத்மீக சிந்தனை, மனிதாபிமானம் பிறந்த குணம் எப்படி எல்லோரிடத்திலும் இருப்பினும் கட்டுக்கோப்பான சமுதாயம் ஒன்றை உருவாக்க வழியும்.

சுவாமி விவேகானந்தர் கூறியது போல் நாக்கோடும் ஆற்றலும் ஆர்வமும் ஈரக்க சிந்தையும், அன்பும் உடைய வாலாக திகழ வேண்டும் என்றார் டி. ஜி. ஏ. சதாரணராஜ் பரீட்சைகளில் எட்டுப் பாடங்களிலும் அதிகூடிய தெரிவுகள் பெற்ற செல்வி அனுசியா அருளுசமம், செல்வி எலிசேதா தயாபரன் ஆகியோருக்கு, ராமகிருஷ்ண-சாரதா சேவாசிரமம், ராமகிருஷ்ண மிஷன் ஆகியவை சாபியின் விசேஷ பரிசில்களை வழங்கினர்.

நெல்லியடி பாதுகாப்பு சபை

உடுப்பிட்டி, மே 21
நெல்லியடி பட்டினவர்களுக்கு பாதுகாப்பு சபையின் பண வட்டாரங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

இதுவரை ஆரம்பிக்கப்படாத ஏனைய வட்டாரங்களிலும் இச்சபையின் விரைவில் ஆரம்பித்து வைக்கப்படும்.

கர்நாடக இசைப் பயிற்சி

மண்டைதீவு மே 21
மண்டைதீவுப்பகுதியில் கலை கலைஞர்கள் ஒன்று அண்மையில் அரங்கேற்றம் செய்துவைக்கப்பட்டது.

மண்டைதீவிருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய அறங்காவலர் சபையினர் ஏற்பாடுசெய்யப்பட்ட இம்மகத்திலே பலர் கர்நாடக இசைப் பயிற்சி வழங்கினார்கள்.

அக்கரைப்பற்றில் ஹர்த்தால்

மட்டக்களப்பு, மே 21
அக்கரைப்பற்றில் கடந்த ஞாயிறு இரவு முஸ்லிம் ராபிக் லீக்கினர் கடிதம் கொடுக்கப்பட்டதை ஆட்சேபித்து அக்கரைப்பற்று, கல்முனை சம்மாந்துறை ஆகிய பகுதிகளில் நிலவுகின்ற ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அனாதைகளாக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவி

கல்முனை, மே 21
அக்கரைப்பற்று பகுதியில் ஆயுதப்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த குடும்பத்தவர்களில் உள்ள சுமார் 25 பிள்ளைகளின் எதிர்கால கல்வி வசதி செய்வதற்கும், நிவாரணம் வழங்குவதற்கும் திருமண - மண்டபங்களுப் பொராளர் கிட்டுவி கலாம்பின்னர் குண்டுகை முன்வந்துள்ளார்.

திருக்கோவில், கல்முனைப்பற்று, பொத்துவில் ஆகிய உதவி அரச அதிபர் அலுவலகப் பிரிவுகளில் இருந்தே இந்த 25 பிள்ளைகளும் திரட்டப்பட்டுள்ளார்கள்.

அக்கரைப்பற்று பிரதேசச் குழுவினர் அண்மையில் மண்டபங்களுப் ஆயர் இல்லம் சென்று மேற்படி குடும்பங்களின் தகவல் திரட்டினர்.

இதனை அடுத்தே ஆயரினால் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள தாக அக்கரைப்பற்று பிரதேச குழுத்தலைவர் ஜனாப் ஏ. ஆமட் கொவ்வையும் செயலாளர் திரு. எல். ஐ. மூர்த்தியும் தெரிவித்தனர்.

மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

மட்டக்களப்பில்

விவசாயம் பெரும் பாதிப்பு

மட்டக்களப்பு, மே 21
மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதப்படையினரின் கெடுபிடிகளால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இந்நிலையில் விவசாயிகளுக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கவும்.

மேற்கண்டவாறு மட்டக்களப்பு பிரதேசக் குழுவிவசாய ஆராய்ச்சித் துறை அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் குறிப்பிட்டுள்ளது

கெற்பயிர்ச்செய்கை பினரிக் சேமிப்பாடுகள் கட்டிக் காட்டப்பட்டுள்ளதோடு காலபோக வேளாண்மை இதனால் பாதிக்கப்பட்டமையும் தெரிவிக்கப்பட்டுள்ளது

கண்ணகி ஆலய 'கடந்தகள்' ஆரம்பம்

மட்டக்களப்பு, மே.21
மட்டக்களப்பு விமானப்படை அதிகாரிகளின் அனுமதியையடுத்து விடத்தல் முனை கண்ணகி அம்மன் ஆலய சடங்கு இவ்வருடம் வழமை போல் நடைபெறுகிறது.

இம்மாதம் 12ம் திகதி ஆரம்பமாகியுள்ளதாகிய நாளை மறுதினம் 23 ஆம் திகதி அதிகாலை குளிர்த்தி பாடலுடன் நிறைவு பெறுகிறது.

மண்டைதீவில் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு

மண்டைதீவு, மே 21
மண்டைதீவுப் பகுதியில் அடிக்கடி மிக்சாரம் தடைப்பட்டு வருவதாக இப் பகுதியில் மண்ணெண்ணெய் பெரும் நொக்கி எழுந்துள்ளது

சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தும் கொள்ளையர்கள் கடுப்பாட்டு விலைக்கும் கூடுதலாக மண்ணெண்ணெய் விற்று வருகின்றார்கள்.

இப்பகுதியில் சட்டவிரோத மின்சாரங்களை வர்களின் தொகை அதிகரிப்பதும் மின்சாரம் தடைப்படுவதும் தடைபடுவதற்கு காரணமாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்து சமய பரீட்சை முடிவு விரைவில்

மட்டக்களப்பு, மே 21
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை 1982 - 1983 இந்து சமய பாடநெறி பரீட்சை முடிவுகள் விரைவில் வெளியிடப்படுமென ஆசிரிய கல்விப் பணிப்பாளர் உறுதிபடுத்தினார்.

ஏனைய பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ள போதிலும் இந்து சமய பாடநெறி பரீட்சை முடிவு மட்டும் இதுவரை வெளியிடப்படவில்லை

இது தொடர்பாக இ. த. ஆ சங்கத் செயலாளர் திரு. த. மகாசிவம் அதிகாரி கல்விப் பணிப்பாளரை சந்தித்த சமயம் இவ் உறுதிவெளிப்படுத்தப்பட்டுள்ளது.

விற்பனைக்கு

உடுவில் ஆக் (Ark) லேனில் வீடு ஒன்று தரைப் பரப்புக் காணி உடன் விற்கப்படுகிறது விரும்பினோர் S. I Watson, Ark Lane, Uduvil.

L.P. GAS: இல்லை
BIO GAS: இருக்கிறது

நேற்று — மண்ணெண்ணெய்,
இன்று — L P. Gas, நாளை—மின்சாரம்?

எந்தக் கட்டத்திலும் எரிவாயுச் சாதனம் உதவியைக் கைவிடாது இன்று முதலிட்டால், காற்றைப் பூராவும் வயிட்டு, உங்களுக்கு நிரந்தரி 5 மாடுகளின் சாணம் கிடைக்குமாயின், உடனே தொடர்புகொள்க உத்தரவாதத்துடன் அமைத்துத் தருவோம் சமையல், விளக்கெரிக்க, நீரிறைக்கப் பயன்படுத்தலாம்

டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்
476, பிரதான வீதி, சுண்டுக்குளி.
(சென்ற தோஸ்ல் கல்லூரி முன்பாக)

முரசுமோட்டையில் இசை, நடன, நாடகப் போட்டி

நல்லூர், மே 21
பரந்தன் வட்டாரத் திற்கான இசை, நடன, நாடகப் போட்டிகள் முரசுமோட்டை முருகானந்த கலா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

இவ்விழாவிற்கு பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ந. தணிகாசலம்பிள்ளை தலைமை வகித்தார்.

போட்டியில் கண்டாவளை, கலைவெட்டித்திடல், தர்மபுரம், பரந்தன் ஆகிய பகுதிகளில் இருந்து ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

போட்டிகளில் கூடுதலான இடங்களை பரந்தன் முரசுமோட்டை பாடசாலை மாணவர்கள் பெற்றுக்கொண்டனர்.

போட்டியில் கிராமிய கலை நிகழ்ச்சியை உமையாள்புரம் அ. த. க பாடசாலை மாணவர்கள் நடத்தி காண்பித்தனர்.

இப்பகுதிகளில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளைக் மத்தியிலும் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு பொருட்கள் பரிசாட்டுத் தெரிவித்தனர்.

மனம்விட்டுப் பேசி இடைவெளிகளை நிரப்பலாம் - ரெனி

கொழும்பு, மே 21
நாளான சனாதிபதி மாளிகையில் உள்ள இடைவெளியை இருதரப்பினரும் மனம் விட்டுப்பேசி நிரப்பிக்கொள்ளலாம்.

இப்படி நிதி அமைச்சர் ரெனி டி மெல் சொன்னார்.

கல்முனையில் கல்லூரி விழாவில் கலந்து கொண்ட நிதி அமைச்சர் சொன்னதாவது:

இன்று நாட்டில் ஜனநாயக சோஷலிசம் மலர்ந்து கொண்டிருக்கிறது. செயலில் கிடையாது.

நான் தெரிவிக்கும் செய்தியை நான் தமிழ்த் தீவிரவாதிகளிடம் சந்தித்தேன். நீதி நியாயமான ஆட்சி இலங்கையில் உருவாகவேண்டும் என்று அவர்கள் கூறினார்கள்—இப்படி நிதி அமைச்சர் சொன்னார்.

புத்தகங்களுக்கு 10 ஆயிரம் ரூபா

மண்டைதீவு, மே 21
மண்டைதீவு கொழுசன நூல் நிலையத்திற்கு புதிய நூல்கள் கொள்வனவு செய்வதற்கு இவ்வருடம் பத்தாயிரம் ரூபாவை யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை ஒதுக்கீடு செய்துள்ளது.

மாணவர்களுக்கும் வாசகர்களுக்கும் மிகவும் பயன் உள்ள புதிய நூல்கள் இந்தப் பணத்தின் மூலம் கொள்வனவு செய்ய முடிந்தது எனறு நூலகர் [illegible] தெரிவித்தார்.

கட்டடங்கள் சேதம்

யாழ்ப்பாணம் மே, 21
திங்கள்கிழமை கோட்டையில் இருந்து நகர்த்தப்பட்டதுப்பாக்கி குண்டுகள், "ஷெல்" தாக்குதல்களினால் யாழ் நகரில் பல அரச, தனியார் கட்டடங்கள் சேதமடைந்தன

பிரதம தபால் நிலையம் வீரசிங்கம் மண்டபம், தொண்டர் தொடர்புகள் நிலையங்கள், பொலீஸ், [illegible] கல்லூரி, நிதியமைச்சு ஆகியவை சேதமடைந்தன.

பண்ணிசை நூல் தொகுப்பு

வட்டுக்கோட்டை மே 21
யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான பண்ணிசைப் போட்டிகளுக்கான நிகழ்ச்சி முறைகள் அடங்கிய தொகுப்பு நூலொன்று யாழ் கல்வித்திணைக்களத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.

இத்தொகுப்பு நூலை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. கணேசபிள்ளை தொகுத்துள்ளார்.

பண்ணிசைப் போட்டிகளுக்கான நிகழ்முறைகள் இதில் அடங்கியுள்ளன. பாவர் பிரிவு, ஆரம்ப பிரிவு, கீழ்ப் பிரிவு மத்திய பிரிவு, மேற், பிரிவு அதிமேற் பிரிவு ஆகிய பிரிவுப் போட்டிகளில் பங்குபற்றுவோருக்குத் தேவையான நிகழ்முறைப் பாடல்கள் பிரிவுப் பிரகாரம் தொகுக்கப்பட்டுள்ளன.

பாடசாலையில் இடநெருக்கடி

மண்டைதீவு மாணவர் கஷ்டம்

மண்டைதீவு மே 21
மண்டைதீவு மகா வித்தியாலய மாணவர்கள் இடவசதியின்மையால் பெரும் கஷ்டப்படுகின்றார்கள்.

மாற்றாவட்டக் அபிவிருத்திச் சபையில் பல்லாப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தில் இரு வகுப்பு கட்டிடம் ஒன்று அமைப்பதற்கு இரண்டு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆறுவகுப்புக்களை கொண்ட வகுப்பு கட்டிட ஆரம்பித்தமை மாணவர்கள் சென்றும் இன்னும் பூர்த்தியாகவில்லை.

விரைவாக இக்கட்டிடத்தை கட்டி முடித்து இடவசதியின்மையை நிவிர்த்தி செய்யுமாறு மேற்படி வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்கள் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளரை கோரியுள்ளார்கள்.

பிலிபநேரி நவநாள் திருவிழா

யாழ்ப்பாணம் மே 21
பக்தாவத்தை புனித பிலிப்நேரியார் கோவில் திருநாள் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

பாவர் பிரிவு, ஆரம்ப பிரிவு, கீழ்ப் பிரிவு மத்திய பிரிவு, மேற், பிரிவு அதிமேற் பிரிவு ஆகிய பிரிவுப் போட்டிகளில் பங்குபற்றுவோருக்குத் தேவையான திருமுறைப் பாடல்கள் பிரிவுப் பிரகாரம் தொகுக்கப்பட்டுள்ளன.

சமகால பிரச்சினைகளுக்கு கொண்டு எவ்வகையான முறையில் திருநாள் கொண்டாடும் படியும் பங்குத்தந்தை அருள்திரு லைக்கல் பற்றிய அடிகளார் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ் நகரில் நடந்த தாக்குதலில் காயம் அடைந்தோர் விவரம்

நல்லூர், மே 21
நேற்று முன்தினம் யாழ் நகரில் நடைபெற்ற ஷெல் தாக்குதலில் துப்பாக்கிப் பிரயோகங்களில் பொது காயமடைந்தோர் விவரம் வருமாறு.

அமிர்தராசா அமிர்தலேஜினி(5வயது), கிரேசக்ரோ, ஜோசப் இருதராணி - (21 வயது), ஜோசப் சரிபராவி (22 வயது) இவர்கள் இருவரும் இணைந்த பிள்ளைகள் அமிர்தராசா ராணியம்மா (35வயது), அமிர்தராசா அமிர்தசேவி (14 வயது) இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எம். ரவி, சே ஜீவதாஸ் சே நடராசா (36 வயது) ஏ. அமுதசேவி (7 வயது), பி ஜெயநிஸ்டாக், எம் ஜெயரட்ணம் (17வயது), என் சுதர்சன், ஏ. மைக்கேல்வரன் (9வயது), ஏ. பிரி (22 வயது), பி. ரவி(7வயது) என். தர்மராசா (40 வயது), பி. சின்னராசா (47 வயது), ஏ அந்ரன் (20வயது), எம். வண்ணகிளி (2 வயது) எம். அஜீத்(22வயது),ஏ இராசரட்ணம் (17 வயது), எ நிலோஸ்வரன் (19வயது) நி வேதநாயகம்,இ சேவராசா (8வயது), ப. பவநிதி (22 வயது), மார்க் கண்டு சுதா (18 வயது), ஜெயூர் மஜீக் (16 வயது), வசுதேவன் நிரஞ்சன் (17வயது) ஐ ஸ்ரீதரன் (25 வயது) எம். ஜெயராத்தன், நி. கனகரெத்தினம் (48 வயது), என் உதயகுமார் (18 வயது), தர்மலிங்கம் (17 வயது), ஆ. குரிச்சந்திரன் (40 வயது), ஏ பொலிஜஸ்(19வயது) எம். முரளிதாசன் (25 வயது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

பக்தி எப்பது மன ஒருமைப்பாட்டினால் வருவது அந்த மன ஒருமைப்பாடு நமக்கு வருவதற்கு இறையருள் வேண்டும்.

• ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர்

உதயன்

இல. 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
ராஜாவீதி 22078
யாழ்ப்பாணம். 21 05 86 த. பெ. 23

எந்தவகை யுத்த தர்மம்?

யாழ்ப்பாண நகரின் மத்தியில் அடுத்தடுத்து இரண்டு தினங்கள் விமானத் தாக்குதல்கள் நடைபெற்றுவிட்டன. இதனை எழுதிக் கொண்டிருந்த போதும் ஹெலிக்கொப்டர்களும், பொம்மர் விமானங்களும் வானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

எப்போது, யார் தலையில், எந்த வீட்டில், எந்த அலுவலகத்தில், ஆஸ்பத்திரியின் எந்த வார்ட்டில், எந்தப் பாடசாலையில் "பொம்மர்" வந்து குண்டைக் கக்கும் என்பது யாருக்கும் தெரியாது!

நகரவாசிகள், அலுவலக ஊழியர், பாடசாலை மாணவர், நகருக்கு பெஷனை எடுக்கவென்றும், வங்கிக்கு என்றும், ஆஸ்பத்திரிக்கு என்றும் தவிர்க்க முடியாத அவசர – அவசிய வலுவலுக்களுக்கு வந்தவர்கள் ஆகியோரின் உயிர் வலுவானவர் போல் மேலே சுற்றும் வான ஊர்திகள் எப்போது மனித வேட்டையாடும் என்பது எவருக்குமே தெரியாது!!

அந்தக் கட்டத்துக்கு யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை வந்துவிட்டது. இதற்காகவே தொழிலாளி பிறப்பவன் மனிதன். ஆனால் ஈழத் தமிழ் மக்கள் வதைபடவே சாவதற்கு என்றே பிறந்தவர்களாகி விட்டார்கள்.

அரசாங்கத்தினால் அவ்வாறு ஆக்கப்பட்டு விட்டார்கள்.

விமானத் தாக்குதல், போர்களின் இறுதிக் கட்ட வழிமுறையாகவே கருதப்படுவது உண்டு. இரண்டு நாடுகளுக்கு இடையே பிரகடனப்படுத்தப்பட்ட போர் நடக்கும்போதுகூட, பொது சனம் வாழும் பகுதிகள் தாக்கப்படுவதில்லை. எதிரி நாட்டுப் படைகளின் கேந்திர நிலையங்களே தாக்கப்படுவது உண்டு.

ஆனால் யாழ்ப்பாண நகரின் சனசந்தடியுள்ள இடங்களில், வர்த்தக நிலையங்கள் நிறைந்த இடங்களில், நகரின் கேந்திர இடங்களில் கடந்த இரண்டு நாட்களாக குண்டுகள் வீசப்பட்டன.

தமிழ் இளைஞர்கள் தமது கலைவான தமிழ் முத்துக்காகப் போராடுகிறார்கள். அவர்களது கனவு நனவாக நாம் இடந்தரப் போவதில்லை என்று பாதுகாப்பு அமைச்சர் திரு அத்துலத் முதலி நாடாளுமன்றத்தில் கூறியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் விமானத் தாக்குதல்களும் போராளிகளுக்கு எதிராக நடத்தப்படுவதாகவே அரசாங்கம் கூறும். அதில் சந்தேகம் இல்லை.

அவ்வாறாயின் அரசாங்கம் யுத்தப் பிரகடனம் செய்து விட்டதா? அது குறித்து பரிசீலிக்கப் படுகிறதா?

அவ்வித அறிவிப்பு எதுவுமின்றி, அரசியல் தீர்வுதான் எமது வழி என்று கூறிக்கொண்டு போராளிகளை ஒழித்துக் கட்டுகிறோம் என்று சொல்லி, அப்பாவி மக்களை உயிர் வேட்டையாடும் செயல் எந்தவகையான யுத்த தர்மம்?

யுத்தம் புரிவதற்கும் ஒரு தர்மம் உண்டு. இணங்கப்பட்ட வழிமுறைகள் உண்டு. ஆயுதம் வைத்திருப்பவனுடன் ஆயுதம் கொண்டு போராடலாம். வெற்றி தோல்வி அவனவன் பலத்தையும், திறமையையும் பொறுத்தது.

ஆயுதமே தூக்கத் தெரியாமல், தனது அன்றாடம் பிழைப்புக்காகவும், அன்றாட அலுவலுக்காகவும் தவறுக்குச் செல்லும் பொதுமகனை வானத்திலிருந்து வேட்டையாடுவது எந்தக் காலத்து, எந்த விதி சார்ந்த யுத்த தர்மம்?

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே வழி தமிழர்களை அழிப்பதுதான் என்று அரசு கருதியிருக்க வேண்டும். போராளிகளை அழிப்பதாகக் கூறி தமிழர்களை அழித்து விடலாம் என்றும் அரசு நினைக்கலாம். அரசின் அநாகரீகமான வானத் தாக்குதல்களும், அடிப்படை மனித உரிமை மீதல்களும் அதனையே மறைமுகமாகக் காட்டுகின்றன.

யுதத்த பிரகடனம் செய்யாமல், மக்களுக்கு அது பற்றி அறிவிக்காமல், உலகம் அதனைத் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாதற் செய்து கொண்டு விமானத் தாக்குதல் நடத்துவதானால் அது எதைக் காட்டுகிறது?

அரசியல் தீர்வு என்று கூறிக்கொண்டே தமிழ் மக்களை அழிக்கும் இராணுவத் தீர்வை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதனை அது புலப்படுத்தவில்லையா? இதனை உலக நாடுகள் விரைவில் புரிந்து கொள்ளாமலா போகும்?

எந்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே?.. இந்த உலகிலே?

மாணவர் வளர்ச்சி பெற்றோரில் தங்கியுள்ளது கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம் மே 21 பெற்றோர் ஆசிரியர்களின் தொடர்பான உறவு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அத்தியாவசியமான தாகும் தமது பிள்ளைகளது வளர்ச்சிக்கு பற்றி பெற்றோர் ஆசிரியர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். இதனால் ஆக்குனர்களை மேம்படவைக்க ஆசிரியர்களுக்கு இயலுமாகிறது இதனால் பிள்ளையின் எதிர்காலம் பாதுகாக்கப்படுகிறது.

என்னை இவ்வாறாகப் இந்த விநியோகத்திற்கு இடம்பெற்ற பெற்றோர் ஆசிரியர் கருத்தரங்கிற்கு தலைமை வகித்து உரையாற்றிய திரு. ச. வேலாயுதம் தெரிவித்தார்.

சோதனையும் வேதனையும் நிறைந்த இந்த நாட்டிலும் இப்பாடசாலையில் கடைமையுரியவர்கள் தமது கடமையை செம்மையாக செய்கிறார்கள்.

மாணவர்கள் நன்கு தேர்ச்சி பெற ஆசிரியர்கள் உழைக்கிறார்கள் கடந்த நான்கு வருடங்களாக இல்லாதிருந்த கேக்அதிகரிப்பு இவ்வருடம் ஏற்படவில்லை

வடமாநில கல்விப்பணிப்பணியாளர் விழாவில் நடத்தப்பட்ட விருந்தும் 'ஆசிரியர் தின விழா'வில் இந்தப்பாடசாலை அதிகரும் வெகுவாக பெறுவர் என்றார்.

அதிபரி திரு. க. வெநாயகமூர்த்தி சிறப்புரையாற்றுகையில்,

சோதனையும் வேதனையும் நிறைந்த இந்த நாட்டிலும் இப்பாடசாலையில் கடைமையுரியவர்கள் தமது கடமையை செம்மையாக செய்கிறார்கள்.

பங்களாதேஷில் ஜாதிகாகட்சி அறுதிப் பெரும்பான்மை

டாக்கா, மே.20

பங்களாதேஷ் பொதுத் தேர்தலில் அரசாங்க ஆதரவு 'ஜாதிகா கட்சி' அறுதிப் பெரும்பானமை பெற்றுவிட்டது.

திங்கள் மாலை வெளிவந்த ஏழு தேர்தல் முடிவுகளில் மூன்று ஜாதிகா கட்சிக்கு கிடைத்தன. இதனை அடுத்து ஜாதிகா கட்சி வைப்பாற்றிய ஆசனங்களின் எண்ணிக்கை 151 ஆக உயர்ந்தது.

பங்களாதேஷ் சட்டசபை முழு உறுப்பினர்கள் எண்ணிக்கை 300 ஆகும்.

பிரதான எதிர்க்கட்சியான அவாமி லீக் 75 ஆசனங்களைக் கைப்பற்றி உள்ளது.

அவாமி லீக்கின் கூட்டணிக் கட்சிகள் மொத்தம் 31 ஆசனங்களைக் கைப்பற்றின.

இடைநடுவில் படிப்பைக் கைவிடும் இளைஞர்களுக்கு சீனா எச்சரிக்கை

பீகிங், மே 20

சீன இளைஞர்கள் தமது படிப்பை இடை நிறுத்தி விட்டு வேலைகளைத்தேடி ஓடுகின்றார்கள். இதற்கு நிரந்தர கடுந் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்விதம் சீன அரசு இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் எச்சரிக்கை செய்துள்ளது.

சீனாவில் 15வயதிற்கும் 24வயதிற்கும் இடைப்பட்டவர்கள் தமது படிப்பைக் கைவிட்டு வேலை வாய்ப்புக்களைத் தேடுகின்றனர். கணக்கு 16 கோடி. இளைஞர்களும் யுவதிகளும் இதில் அடங்குவர் என அண்மையில் சீனாவில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு மூலம் அறிய முடிகிறது.

சீனாவில் வேலைபெறுவதில் சரிர உழைப்பாளர்களும் வாழ்வியற்றத்தகுதி உடையவர்களாகவே உள்ளனர்.

இந்த நிலை மாறவேண்டும் என சீன அரசாங்கம் அறிவுறுத்தி உள்ளது.

வெளி உலகில்

தமிழக வரலாறு நிலை நீங்க நடவடிக்கை

சென்னை, மே 20

தமிழக அரசு தண்ணீர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு எடுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

வரட்சிப் பிரதேசங்களில் வெறுமனே ஆழமாக்குவதற்கும், கேலிக்கான புதிய கிணறுகளைத் தோண்டுவதற்கும், தண்ணீர் தொட்டிகளை மழுது பார்ப்பதற்குமென சுமார் 10 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட கலெக்டர்களுக்கான கருத்தரங்கில் கலந்து கொண்ட தமிழக முதல்வர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் இந்தவகை வெளியிட்டார்.

மிகவும் வரட்சிப் பிரதேசங்களாக தர்மபுரி மாவட்டமும், சேலம், பெரியார், சேலம், திருச்சி, காமராஜர், மகம்மொன் முத்துராமலிங்கதேவர், ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் சில பகுதிகளும் கணிக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசங்களில் குடி நீர்தட்டுப் பாடு அதிக அளவில் இருந்து வருவதாகவும் இதனைச் சீர்செய்யும் நோக்குடனேயே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவும் முதல்வர் மேலும் தெரிவித்தார்.

சீனாவில் ஷேக்ஸ்பியர்

பீகிங், மே 20

சீனாவில் முதன் முதலாக ஷேக்ஸ்பியர் விழா ஆண்மையில் கொண்டாடப்பட்டது.

ஷங்காய் நகரிலும் பெய்ஜிங் நகரிலும் இவ்விழாக்கள் இடம் பெற்றன.

போதைவஸ்துடன் தமிழர்கள் கைது!

பாரிஸ் மே 20

இரண்டு இலங்கைத் தமிழ் வாலிபர்கள் பிரான்ஸ்-சுவிஸ் எல்லையில் வைத்து பிடிபட்டனர்

இவர்களிடம் இருந்து 48 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

ஒரு கிலோ ஹெரோயின் 100 டாலர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கிளர்ச்சி படைமீது ஆப்கானில் தாக்குதல்

பெஷாவர், மே 20

பாகிஸ்தான் எல்லையில் உள்ள ஆப்கானிஸ்தான் முஸ்லிம் கெரில்லாக்களின் நிலைகள்மீது சோவியத் — ஆப்கான் படைகள் பெரும் தாக்குதல் ஆரம்பித்துள்ளன

முஸ்லிம்களின் புனித நோன்பு தினம் ஆரம்பமாகி இருக்கும் இவ்வேளையில் இத் தாக்குதல் ஆரம்பமாகி உள்ளது

பாரதீய ஜனதா மத்திய அரசு மீது கண்டனம்

புதுடில்லி, மே 20

பாரத நாட்டின் சட்டமும் ஒழுங்கும் சீர்கெட்டு பாதாளக்குப் படுவதினால், பஞ்சாப்மாநிலம் இதற்கு நல்ல தொரு எடுத்துக் காட்டாக அமைகின்றது.

இவ்வாறு பாரதீய ஜனதாக் கட்சியின் நல்லமைப் பீடம் மத்திய அரசைச் சாடியுள்ளது.

முன் னெப்பொழுதும் இல்லாதவாறு நாட்டில் ஒற்றுமையை சீர்குலைப்பதற்கு அந்நியர்கள் தோன்றியுள்ளன.

நாட்டின் ஒற்றுமையை சீர்குலைக்கும் எந்த ஒரு நடவடிக்கையிலும் தேர்ந்து எடுக்கப்படாமல் அரசு அதற்கு ஆவன எதுவுமே செய்வதாகத் தெரியவில்லை.

நாட்டில் பொருளாதாரத்தை தளர்வு பெறச் செய்யாமல் முன்னெச்சரிக்கையுடன் மத்திய அரசு செயல்படவேண்டும்

இவ்வாறான தீர்மானத்தை பாரதீய ஜனதா மத்திய கமிட்டி மத்திய அரசிற்கு அனுப்பி வைத்துள்ளது.

வாஷிங்டனின் அரபு எதிர்ப்பு கொள்கை

மாஸ்கோ, மே 20

அமெரிக்கா லிபியா அதிரடிச் செயல்களை இருக்கலாம். பிரசாரம் சந்திரனுக்கு இ-தைப் பெற முடியாது இல்லையே உண்மை என்னவென்றால் ஆயுதக்காரரின் மத்திய மெத்தப்போக்கு அரபு முகாமிற்கு நாடுகளுக்கு எதிரானதாகும்.

இவ்வாறு சாடுகிறது சர்வதேச விவகாரம் என்ற பிரபல சஞ்சிகை.

தமிழ்ப் பஞ்சாபிகள்

சென்னை, மே 20

தமிழ் நாட்டில் தொடர்ச்சியாகப் பல வருடங்கள் வசித்துவரும் பஞ்சாபிகள் தமிழருடைய பழக்க வழக்கங்களை நன்கு அறிந்துள்ளனர். ஆனால் தமிழருடன் ஒற்றுமையாக வாழமுடிந்ததில் விருப்பு இல்லை எனவே அவர்களை 'தமிழ்ப் பஞ்சாபிகள்' என அழைப்பதே பொருத்தமானதாகும்

இவ்வாறு தமிழக பஞ்சாப் சங்கத்தினரின் பொன்விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றிய பாரத ஜனாதிபதி திரு. ஜெயில் சிங் தெரிவித்தார்.

ஏறக்குறைய மாநிலங்களிலுள்ள பஞ்சாபியர் தமிழ் நாட்டுக்கு வந்து இங்கு வாழும் பஞ்சாப் மக்களின் வாழ்க்கை முறையைக் கற்க வேண்டும்—பின்பற்றவேண்டும். அவர்கள் தமிழ் நாட்டிலிருக்கும் பஞ்சாபிகள் வேறு மாவட்டங்களுக்குச் சென்று தமிழ் மக்களிடம் தாம் கற்றவற்றை எடுத்துக் கூற வேண்டும்.

தமிழ் மக்களின் உழைப்பினதும் தன்மை—திறமைக்கு கொடுக்கும் மதிப்பு ஆகியவற்றைத் தமிழ் பஞ்சாபிகளுக்கு நன்கு கடைப்பிடித்து வருகின்றார்கள்.

இவ்வாறு ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

ஏழு சீன விமானங்கள் வருகின்றன

கொழும்பு, மே. 21

இலங்கை விமானப் படைத் தேவைக்கு 7சீன விமானங்கள் வருகின்றன.

பணம் செலுத்து இலங்கை அரசு இவற்றை வாங்கி உள்ளது.

இப்படி கொழும்பு செய்தி நாளிதழான 'தினமின்' தகவல் வெளியிட்டு குறிப்பிட்டு இருந்தது

இந்தச் சீன விமானங்கள் வடக்கு, மேற்கு நாகாணங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பாவிக்கப்படும்.

முன்னர் 70,000 முதல் 1லட்சம் வரையான அமெரிக்க டாலர்களுக்கு இந்த விமானங்கள் விற்கப்பட்டன. இப்போது இலங்கை அரசாங்கம் 25 000 டாலர்களுக்கு இவ்விமானங்களை வாங்கியுள்ளது.

இப்படி 'தினமின்' செய்தி கூறுகிறது.

தேடுதல்

மட்டக்களப்பு, மே 21

மட்டக்களப்பு கல்லடி தெருவையும் அதைச் சுற்றிய பகுதியையும் பாதுகாப்பு படையினர் நேற்று அதிகாலை சல்லடை போட்டுத் தேடினர்.

சுமார் 4 மணி நேர தேடுதலில் 58 பேர் வைத்தியர் வைத்தான் கல்லடி முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

தேடுதலின்போது சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் வெல்லையன் இராஜகுலேந்திரன் (வயது 18) என்ற வாலிபர் படுகாயம் அடைந்தார்.

குடாநாட்டில் நடந்த தாக்குதல்கள் குறித்து சிறில் ரணதுங்கா

கொழும்பு, மே. 21

குடாநாட்டில் நிகழ்ந்த தாக்குதல்கள் பற்றி கட்டுப்படுத்தாள பத்திரிகைகட் தொடர்பு செய்திகளை செய்தியாளர் மாநாடு ஒன்றில் வெளியிட்டார்.

அவர் சொன்னதாவது:

தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, கோண்டாவிலானாறு முகாம்கள்மீது நேற்றுமாலை நடத்தினர்.

கோப்பை

சோட்டை முகாம்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார்— 7 சிப்பாய்கள் காயமடைந்தனர். இராணுவ நடவடிக்கை

ஆனையிறவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த இராணுவம் மேலே தொடர முடியாத நிலை ஏற்பட்டது.

பலாலி கடுமையான சோதனையிலிருந்து, தாக்கப்பட்ட இடங்களில் உள்ள இரண்டு பகுதிகளை நேற்றிரவு கண்ணிவெடிகளுக்கு இரையாக்கப்பட்டன. இதனால் ராணுவம் தனது நடவடிக்கையை மேலே தொடர முடியவில்லை.

வல்வெட்டித்துறை

வல்வெட்டித்துறை முகாமை நேற்றிரவு நிகழ்ந்த தாக்குதலின்போது ஹெலிக்கொப்டர் ஒன்றுக்கு சேதமேற்பட்டது.

போராளிகள் மரணம்

நல்லூர், மே 21

நாவிற்றுமெமை மாவடி கோட்டையில் இருந்து வெளியேறிய சிப்பாய்களுடன் நடந்த நேரடி மோதலின்போது எழுவர் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்த இரண்டு விடுதலைப் போராளிகள் மரணமடைந்தனர்.

செல்வராசா (பலாலி), நெடி (வாலிபன் சுதன்) ஆகிய இரண்டு போராளிகளுக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அஞ்சலி செலுத்தி நினைவு விழா செய்யப்பட்டுள்ளது.

பெற்றோல் பெரும் தட்டுப்பாடு

கண்டுக்குளி, மே 21

யாழ்ப்பாணத்திற்கு பெற்றோலுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் வாகனப் போக்குவரத்து நேற்று வெகுவாகக் குறைந்திருந்தது.

வாகனங்கள் சேவையை நடத்தும் மினிபஸ் சாரதிகள் நேற்றைய தினம் சேவையை நடத்த முடியாமல் தவித்தனர்.

சோவியாதிமொழி

குறள்:-

நிறைவில்லா தர்பிறர் செய்யினும் நோ நொந்து
அறனில்லா செய்யாமை நன்று.

பொருள்:-

தகுதி அல்லாதவர்கள் தனக்குப் பிறர் செய்த போதிலும் அதனால் துன்பத்திற்காக நொந்து அறம் அல்லாதவைகளைச் செய்யாதிருத்தல் நல்லது

கைக்குண்டு வெடித்து இரு சிங்களவர் பலி

கொழும்பு, மே 21

கைக்குண்டு வெடித்து இரண்டு சிங்களவர்கள் மரணமாகினர்கள்

முத்தையாராம் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

தனிப்பட்ட தகராறின் ஒரு கட்டமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அக்கரைப்பற்றில் பெண்ணுக்கு மின்கம்ப தண்டனை

அம்பாறை, மே 21

அக்கரைப்பற்றில் திருமணமாகாத தமிழ் இளைஞன் ஒருவனுக்கு மின்கம்ப மரண தண்டனை சனிக்கிழமை விதிக்கப்பட்டது.

ஆயுதவேம்புப் பகுதியில் உள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்கு முன்னால் உள்ள மின்கம்பத்தில் இட்டு மின்சாரம் கட்டப்பட்டிருக்கக் காணப்பட்டது.

பெண்ணின் பெயர் சித்ரா. இராணுவத்துக்கும் ஏதுவிடு ஊர்களுக்கு கொடுப்பவருக்கு இதுதான் தண்டனை என்று எழுதப்பட்ட அட்டையும் அந்த இடத்தில் காணப்பட்டது.

புலிகள் - கூட்டணி குற்றச்சாட்டு

சென்னை, மே 20

இலங்கை அரசு இராணுவத்தினரையே ஏவிச் செய்கிறது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் அறிவித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சாளர் ஏ. ஸ்ரீ. பிரபாகரன் இதுபற்றிச் சொன்னதாவது:

ஜெயவர்த்தனா அரசு இராணுவத்தினரையே ஏவி செய்கிறது. இலங்கை அரசு காட்டிலை வழங்கு மறுப்பதன்மூலம் இந்திய மத்திய அரசு முன்னெடுக்கும் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் சொன்னதாவது:-

இலங்கை அரசு இராணுவத்தினரையே நாடிச் செல்கிறது பிரகடனப் படுத்தாத முற்றுகை ஒன்றை யாழ்ப்பாணத்தில் இலங்கை ஆயுதப் படைகள் மேற்கொண்டுள்ளன.

காரைநகரில் கப்பல்கள்

யாழ்ப்பாணம் மே 21

காரைநகர் கடலில் ரோந்து கப்பல்கள் இரண்டு இலங்கை பிரிவைச் நகர்ந்து விட்டன.

இந்தக் கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்படுகின்றன.

இந்தக் கப்பல்களைச் சுற்றிலிருக்கிறார்கள் கடல்வலம் புரிந்து வருகின்றன

மேலும் நான்கு சிப்பாய்கள் கைது

திருகோணமலை, மே 21

விமானப் படைச் சிப்பாய் ஒருவரைக் கட்டுக் கொலைசெய்த சம்பவம் தொடர்பாக மேலும் நான்கு கடற்படைச் சிப்பாய்கள் கைதாகினர்கள்.

இதுவரை தொடர்பாக எத்தனையோ கடற்படையினர் கைதாகி விசாரணையில் வைக்கப்பட்டனர். புதிதாகக் கைதுசெய்யப்பட்டவர்கள் விசாரணை மறிவிலே வைக்கப்பட்டனர்.

திருமண வீடு ஒன்றில் நடந்த மோதலின்போது சனிக்கிழமை இரவு விசாரணைக்குச் சிப்பாய் கொல்லப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DYNAMICA
STEEL & TEAK FURNITURE
for style & quality
WIDE SELECTION. FAIR PRICES
Dynamica Show Room
476, Main Street.
CHUNDIKULI.
(Opposite St. Johns College)

உதயன்

21-05-1986 புதன்கிழமை

தளபாடங்கள்
வீட்டுக்குக் அலுவலகத்துக்கும்
உருக்கிலும் தேக்கிலும்
உங்கள் ரசனைக்கேற்ற தெரிவு
டைனமிக்கா காட்சியறை
476, பிரதான வீதி, சுண்டுக்குளி.
(செஞ்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்னாள்)

ஊர்காவற்றுறையில் பலர் வெளியேற்றம்

நான்கு நாள் மோதலில் பலத்த சேதம்

ஊர்காவற்றுறை, மே 21

ஆயுதப் படையினரின் ஊர்காவற்றுறை நாரந்தனை ஊர்காவற்றுறை, சரவணை, வேலணை, புளியங்கூடல் ஆகிய இடங்களிலும் பதற்றநிலை தொடர்கிறது. இதன்காரணமாக ஊர்காவற்றுறை, சரவணை, வேலணை, பருத்தித்துறை, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் இருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

ஆயுதப்படையினர் கடந்த 17ம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் ஊர்காவற்றுறைப்பட்டினத்திற்கு நடுவேரன வந்து சேர்ந்தனர். அவர்கள் வந்த இறங்கினார்கள்.

பருத்தியடைப்பு உறுதியடி. எழுவரான வந்த படையினர் வரும் வழியில் ஒருவரைச் சோதனை செய்துவிட்டு வந்தனர். பெட்டியிட்ட நபரை பொதுமக்களின் உதவியுடன் யாழ் அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்று வரும் போது வழியில் அவர் மரணமானார்.

இரவோடிரவாக துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தினாலும், பீரங்கி ஷெல் தாக்குதல்களினாலும் முன்று பெண்களும் இரண்டு ஆண்களும் இறந்தனர்.

நான்கு தினங்களாக ஆயுதப்படையினருக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் இடையே நடைபெற்ற போராட்டத்தில் 10க்கு மேற்பட்ட ஆயுதப்படையினரும் 3 விடுதலைப் போராளிகளும் மரணம் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

18ம் திகதி இடம் பெற்ற விமானத் தாக்குதல்களினால் கேலிங், பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயம், அதன்தேர், கொட்டகை நாகசாந்தி நிலையம், வீடுகள் சேதம் அடைந்தன.

19 ஆம் திகதி திங்கட்கிழமை காரைநகரில் இடம் பெற்ற விமானத் தாக்குதலில் ஊர்காவற்றுறை முன்னாள் பட்டினசபைத் தலைவர் திரு. இம்மனுவேலினது கடை முற்றாக எரிந்துவிட்டது. வீடும் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.

பிரதான நோக்கத்தை நாம் அடைந்து விட்டோம்

சபையில் லலித்

கொழும்பு, மே 21

யாழ் குடாநாட்டுக் கடலில் கடல் வெற்றிக் முற்றுகையிடுவது பிரதான நோக்கத்தை நாம் அடைந்து விட்டோம்.

இப்படித் தெரிவித்தார் கடற்படை தளபதி லலித் அத்துலத்முதலி நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவரது அறிக்கையிட்ட நீடிப்பு பிரேரணை மீது பேசுகையில் அமைச்சர் மேலும் கூறினார்:

நிகிராவிலிருந்து திங்கட்கிழமை நடத்த முடியாது போய்விட்டது. இதை இப்போது அவர்கள் நன்கு உணர்ந்திருப்பர்.

முகாம்களையும் அதற்கான பாதைகளையும் பாதுகாப்பதே அரசபடைகளின் முக்கிய நோக்கமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த முன்னிரவு நடத்த முன்னெடுத்த இந்த தமிழர் விடுதலைக் கூட்டணி கூட்டமைப்பு சுவரொட்டிகளை நடுவதை நிறுத்த விருப்பதை வெளியிட்டுள்ளன.

பொலிசுகளுக்கு இனி விடுமுறைகள் என்பதாக்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் சமூகத்தை இயக்கத்தை கழித்து விட்டனர்.

அரசியல் தீர்வுதான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்று இன்றும் இனி நினைக்க அரசாங்கம் மறுக்கிறது.

இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னார்.

இதனிடையே அமைச்சர் அத்துலத் முதலி சொன்னதாக கொழும்பு மாலைத் தினசரி ஒப்சேர்வர் வெளியிட்ட செய்தி பின்வருமாறு:

நேற்றுப் பிரசித்தமாக்கிய ஆயுதப் முன்னாள் யாழ் மத்திய கல்லூரி மைதானம் வரை பாதுகாப்பு வளையம் ஏற்படுத்தினர்.

தீவிரவாதிகளின் தாக்குதலுக்குள்ளான முகாம்களில் உள்ள சிப்பாய்களுக்கு ஆதரவாக பாதுகாப்புத்தான் நாம் வழங்கினோம்.

இப்படி அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னதாக 'ஒப்சேர்வர்' செய்தி கூறியது

மகேஸ்வரி வித்தியாசாலை மெய்வல்லுனர் போட்டி

கண்டுக்குளி, மே 21

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் மகேஸ்வரி வித்தியாசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும்.

நாவலர் மாவட்டச் செயலர் கலைமகள் சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டியில் யாழ் மாவட்டக்கல்வி பணிப்பாளர் திரு. இராசகுமாரன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி, திருமதி தனலக்ஷ்மி சிவநாயகமூர்த்தி, வலிகாமக் கல்வி அலுவலர் திரு. க. மகேசன் ஆகியோர் கலந்து கொள்வர்.

வயாவிளான்

சென்றவர் வீடு திரும்பவில்லை அரச அதிபரிடம் மனைவி புகார்

நல்லூர், மே 21

விடுவிக்கப்பட்ட ஒன்றை ஒழுங்குசெய்யவே வயாவிளான் சென்றவரைக் காணவில்லை.

இவரது மனைவி சரஸ் எனி யாழ் அரச அதிபரிடம் இதுபற்றி முறையிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுவிக்கப்பட்ட ஒன்றை ஒழுங்கு செய்ய கொழும்பையா ஆனந்தன் என்பவரும் முருகையா என்பவரும் வயாவிளான் நோக்கி வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர்.

நிமலன் வெடிச்சத்தம் கேட்டதாகவும் அதனைத் தொடர்ந்து முருகையா என்பவர் கீழே விழப் பேரட்டுவிட்டுத் தப்பி ஓடிவிட்டார் என்றும் தெரிய வருகிறது.

இதனை அறிந்த இவருடன் சென்ற கொழும்பையா ஆனந்தன் என்பவரை இன்றுவரை காணவில்லை என அரச அதிபரிடம் புகாரிடப்பட்டுள்ளது.

ராஜீவுக்கு கருணாநிதி தந்தி

சென்னை, மே 20

விமானத்தாக்குதலால் இலங்கையில் தமிழினம் அழிவதைத் தடுத்து நிறுத்துவதற்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு மு. கருணாநிதி அரசாங்கத்தினூடாக பிரதமர் ராஜீவ் காந்தியைக் கேட்டுள்ளார்.

பேச்சுவார்த்தையை விட்டு ஒதுக்கி நேரடி நடவடிக்கையை எடுத்து இலங்கைத் தமிழரைக் காப்பாற்றும் டி. திராவிட கழகத் தலைவர் திரு. வீரமணி பிரதமர், வெளியுறவு அமைச்சருக்கு அனுப்பிய தந்தியில் கேட்டுள்ளார்.

2ஆம் நாளாக.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் நகர் அதிர்ந்தது. ஹெலிகொப்டரும் தாக்குதலை தொடர்ந்தது.

மக்கள் அங்கும் இங்கும் மாக சிதறி ஓடினார்கள். வாகனங்கள் கண்முடி முழிப்பதற்குள் மறைந்தன.

அரச நிலங்களான்கள், யாழ் செயலகம், மாநகர சபை, காணி அலுவலகங்கள், வங்கிகள் அனைத்துக்கு நன்கு கலுக்கு முன் மூடப்பட்டன.

பரடைசாலைகள் அனைத்தும் உடனே மூடப்பட்டு பாடசாலை மாணவ, மாணவிகள் அங்கும் இங்குமாக பீதியுடன் வீடு கண் நோக்கி விரைந்தனர்.

நேற்றைய யாழ் நகர் சம்பவங்களினால் பெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனத் தெரிய வருகின்றது.

வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் இழுத்துப் பூட்டப்பட்டன. யாழ் நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது.

நேற்றைய குண்டுவீச்சு யாழ் புகையிரதநிலையத்தில் நிறுத்தியிருந்த ஆறாவமையிலும் மத்திய கல்லூரிக்கு அண்மையிலுள்ள பஸ் நிலையத்துக்கு முன்னாக உள்ள ஆலமரத்தடி விநியோகம் விழுந்து வெடித்தன.

பொம்மர் விமானம் குண்டுகளைப் போட்டபோது தமிழீழ விடுதலைப் புலிகள் இலக்கிலிருந்தும் ஹெலிகொப்டர் தாக்குதல்களிலிருந்தும் தப்பிய மாணவர்களும் நேற்று வெளியேறிவிட்டனர்.

வலிகாமத்தில் ஹெலிகொப்டர் தாக்குதல் பிரசித்தமானது

வலிகாமத்தில் தாக்குதல் முன்னர் யாழ் மத்திய கல்லூரி மைதானம் வரை பாதுகாப்பு வளையம் ஏற்படுத்தினர்.

தீவிரவாதிகளின் தாக்குதலுக்குள்ளான முகாம்களில் உள்ள சிப்பாய்களுக்கு ஆதரவாக பாதுகாப்புத்தான் நாம் வழங்கினோம்.

இப்படி அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னதாக 'ஒப்சேர்வர்' செய்தி கூறியது

மகேஸ்வரி வித்தியாசாலை மெய்வல்லுனர் போட்டி

கண்டுக்குளி, மே 21

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் மகேஸ்வரி வித்தியாசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும்.

நாவலர் மாவட்டச் செயலர் கலைமகள் சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டியில் யாழ் மாவட்டக்கல்வி பணிப்பாளர் திரு. இராசகுமாரன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி, திருமதி தனலக்ஷ்மி சிவநாயகமூர்த்தி, வலிகாமக் கல்வி அலுவலர் திரு. க. மகேசன் ஆகியோர் கலந்து கொள்வர்.

பருத்தியடைப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கும் போது பொம்மர்விமானங்கள் இரண்டு இப்பகுதியில் குண்டு வீசின.

இதனால் பலர் காயமடைந்தனர். வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல முடியாத நிலையில் காயங்கள் இருப்பதாகத் தெரிய வருகிறது.

எனினும் சில வல்லமைகளிக் யாழ் வைத்திய சாலைக்கு கொண்டுவரப் பட்டனர்.

பல வீடுகளும் ஆலயங்களும் சேதமடைந்துள்ளன.

பருத்தியடைப்பு குடியிருப்பு காரமடைந்த யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்போர்விபரம் வருமாறு:-

முத்துலிங்கம் மல்லிகா தேவி (45 வயது)

செல்லத்துரை பேரின்பராசி (14 வயது) இவருக்கு முழங்கைக்கு கீழ் ஊறிற்றப்பட்டுள்ளது

நிக்கலஸ்பிள்ளை செல்லத்துரை (58 வயது).

[illegible] (17 வயது)

அரச...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அரச, வங்கி, ஆஸ்பத்திரி அதிகாரிகள் ஆயோரைச் சந்திப் பதற்காகவே இரண்டு இராணுவ அதிகாரிகளும் ஹெலிகொப்டரில் வந்து கொண்டிருந்தனர்.

அந்தச் சமயத்தில் நிலத்தில் இருந்து ரொக்கட் கொண்டு வெடிக்கும் சத்தங்களும் கோட்டை முகாமில் இருந்து துப்பாக்கி வேட்டுக்களும் கேட்ட வண்ணம் இருந்தனவாம்.

அதனால் ஹெலிகொப்டர் கோட்டை முகாமுக்குள் இறங்காமல் பலாலிக்குத் திரும்பிச் சென்றது

அதைத் தொடர்ந்து யாழ் கோட்டை முகாமினுள் காத்து இருந்த அரச அதிபர் மற்றும் அதிகாரிகளை பலாலி முகாமுக்கு வரும்படி கூறப்பட்டது.

அதற்கு அவர்கள் மறுக்கவே நாவற்குழி முகாமுக்கு வரும்படி அழைக்கப்பட்டனர்.

அதன்படி அதிகாரிகள் பஸ் ஒன்றில் நாவற்குழிக்கு சென்று கொண்டிருந்தபோது, செம்மணி வீதியில் வைத்து ஒரு கோஷ்டியினர் அவர்களை மறித்து திருப்பி அனுப்பி விட்டனராம்.

அதனைத் தொடர்ந்து, அரச அதிகாரிகள் — இராணுவ அதிகாரிகள் சந்திப்பு நேற்று இடம்பெறவில்லை.

விமானத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மின் அதிகாரத்துடன் தான், கண்டன அறிக்கை வெளிவிடப்பட்டது

புதிய வன்செயல்கள் மோசமானவை. ஆன்மத் நிதி நோயாளர்கள், பொதுமக்கள் தாக்கப்பட்டுள்ளனர். விமானத் தாக்குதலை இந்தியா வன்மையாகக் கண்டிக்கிறது.

இலங்கைப் பத்திரிகைகள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எதிராக பொய்யில் செய்தியை வரை இந்திய அரசு வன்மையாக எடுத்து உள்ளது — இப்படி இந்திய தனது கண்டன அறிக்கையில் தெரிவித்த இந்தியா

வருமாறு:-

ஆலங்கேணியில் தமிழரின் வீடுகள் எரிப்பு; ஒருவர் கொலை

திருகோணமலை, மே 21

ஆலங்கேணியில் கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்ட தேடுதலின்போது ஒரு தமிழர் துப்பாக்கிச் சூடு தாக்கி மரணமானார்.

தமிழர்களுக்குச் சொந்தமான சுமார் 12 வீடுகள் எரிக்கப்பட்டன.

இறந்தவரின் பெயர் ஆனந்தராசா வயது 40. படையினர் தேடுதலில் ஈடுபட்டிருந்த சமயம் இவர் கடற்கரையில் நின்றுகொண்டிருந்தார். அச்சமயம் துப்பாக்கிச் சூடு தாக்கி இவர் மரணமானார்.

சடலத்தை படையினர் எடுத்துச் சென்றனர். இந்த தேடுதலின்போது காயமடைந்த இரண்டு தமிழர்கள் திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர்கள் மகேந்திரன், நடராசா ஆகும்.

தொலைத்தொடர்பு இன்றுடன் முற்றாக துண்டிப்பு?

யாழ்ப்பாணம், மே 21

நேற்று முன்தினம் பண்ணை பொலீஸ் விடுதியில் சிப்பாய்கள் முகாமிட்டதை அடுத்து யாழ் தொலைத் தொடர்பு ஊழியர்கள் தொலைத்தொடர்பு சேவை மறுத்து வருகிறார்கள்.

இன்றும் ஊழியர்கள் கடமைக்குச் சென்றுவிடில் யாழ் தொலைத்தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்படும் என நம்பப்படுகிறது.

பண்ணை பொலீஸ் விடுதியில் இருந்த சிப்பாய்கள் வெளியேறும் வரை நாம் கடமைக்குத் திரும்ப மாட்டோம் என தொலைத் தொடர்பு ஊழியர்கள் முடிவு செய்துள்ளார்கள்

புலிகள் உரிமை கோரல்

சென்னை, மே 20

வரலாறுக்கு சென்னை — கல்லூரி வீதியில், பெத்தானி என்ற இடத்தில் நிலக்கண்ணி வைத்த சம்பவத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

இச் சம்பவத்தில் ஐந்து சிப்பாய்கள் இறந்ததாகவும், ஒன்பது பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

வலிவையில் காயமடைந்தோர்

பருத்தித்துறை, மே 21

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தொண்டமனாறு ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து நகர்ந்த அதிகாலை தொடக்கம் மாலை வரை தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றன.

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து நிர்க்கப்பட்ட ஷெல்கள் வல்வெட்டி, சுண்டிகுளி, மாலுசந்தி, சோழபுரம், கப்புதூ ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன. இதனால் இப்பகுதியில் பல வீடுகள் சேதமுற்றன.

தாக்குதலின் போது காயமுற்ற எழுவர் பருத்தித்துறை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்

அவர்களின் விபரம்:- திரு. செ. பாக்கியராசா (வயது 18) வல்வெட்டித்துறை.

திரு. எஸ். சுமன் (வயது 20) வல்வெட்டித்துறை.

திரு. ஆர். சிவகுமார் (வயது 20) வல்வெட்டித்துறை.

திரு. எக். மாலைப்பிரமணியம் (வயது 50) வல்வெட்டித்துறை.

திரு. பி. நாராயணன் (வயது 64) வல்வெட்டித்துறை.

திரு. எஸ் வண்ணமயில் (வயது 26) வல்வெட்டித்துறை.

திருமதி. சிவசம்பு கமலா (வயது 40) நல்லூர் தெற்கு, சுன்னாகம் வடக்கு.

இஸ்ரேலிய பேராசிரியர் வருகை

கொழும்பு, மே 21

இஸ்ரவேலிலிருந்து பிரபல வைத்திய துறைப் பேராசிரியர் ஒருவர் இன்று (புதன்) இங்கிலாந்து வருகிறார்.

மன்னியுடன் வரும் பேராசிரியர் பெயர் நாளை மாலை விடுக்கப்படும்.

பொலிகண்டியில் 2 வீடுகள் 1 கடை சேதம்

கரவெட்டி, மே 21

பொலிகண்டி பகுதியில் இடம்பெற்ற யுத்த விமான தாக்குதலினால் ஒரு கடையும் சேதம் அடைந்தன.

கடந்த ஞாயிறு நடந்த சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

பொலிகண்டி, நிக்கலஸ் வீதியில் சவிக் முத்து ஜோசப் என்பவரின் வீட்டிற்கு முன்பாக ஒரு வான் நின்றது. அவ்வேளை ரோந்து சுற்றி வந்த இரு யுத்த விமானங்களும் அவ் வானை நோக்கி வந்து வீட்டு வண்ணம் இருந்தன.

இதனால் ஜோசப்பும் அவர் மனைவியும் அவரது அயல் வீட்டுக்காரரும் வீட்டை விட்டு வெளியேறி சென்றுவிட்டனர்.

வந்திறங்கிய யுத்த விமானங்கள் வானை நோக்கி குண்டு வீச ஆரம்பித்தன. இதனால் அவ்வான் கவிழ்ந்தது. அதனை விட்டு நாலாபுறமும் ஓடினர்.

பின்பு ஜோசப்பின் வீட்டிற்கும், திரு. அந்தோனிப்பிள்ளை என்பவரின் வீட்டிற்கும் மாறி மாறி யுத்த விமானங்கள் குண்டு மாரி பொழிந்தன

இவ் இரு வீடுகளும் கடை ஒன்றும் சேதமடைந்தன. இதனால் ஓர் ஆடும் சில காகிகளும் இக்குண்டு வீச்சில் பலியாகின.

குண்டு வீச்சை அடுத்து மிகவும்பின் முறிந்தும் அறுந்தும் கிடக்கின்றன. மரங்கள் வீழ்ந்து கிடக்கின்றன.

பஸ்சேவைகள் இன்று வழமை நிலைக்கு திரும்பும்

நல்லூர், மே 21

பஸ்சேவைகள் வழமை போல் இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும், யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பதற்றநிலை காரணமாகவும் சில போக்குவரத்துச் சேவைகள் கடந்த சில நாள்களாக நிறுத்தப்பட்டிருந்தன.

எனினும் யாழ். எரிபொருள் நிலையத்திலிருந்து போதிய அளவு எரிபொருள் கிடைத்ததன்காரணமாக தொடர்ந்து அனுராதபுரம், வவுனியா, மட்டக்களப்பு பஸ் சேவைகள் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் பஸ் சேவையினரின் கோரிக்கை — யாழ் சேவைகளும் இன்று முதல் வழமைபோல் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மக்கள் இடம் பெயர்வு

கரவெட்டி, மே 21

சிப்பாய்களின் தாக்குதல் சம்பவங்களை அடுத்து தொண்டமனாறு, வல்வெட்டித்துறை பகுதியில் இருந்து கரவெட்டி கரணவாய் பகுதிகளுக்கு மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

நினைவுச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 21

பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுச் சொற்பொழிவு இன்று (புதன்) பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

கலாநிதி தமிழ்ப் பேராசிரியர் ஓ. மதியாநந்தன் "மத்திய கால இலக்கியத் தாரம்: தமிழ்வளர் கணங்களும் பக்குட்டு வாணிபமும்" என்ற பொருள் பற்றி நினைவுச் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

கலை பீ. மதியபதி தாபாலிருஷ்ணன் தலைமை வகிப்பார்

மகிழங்கழகு: : :

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கப்படுவதற்கும், வதை செய்யப்படுவதற்கும், பாடசாலைகள் இராணுவ முகாமாக மாறறப் படுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தே இந்த வெளிநடப்பு இடம் பெற்றது.

அதிகாலை யாழ் வெளியாகப்பதிரி மீது நடந்த ஹெலிகொப்டர் தாக்குதலைக்கண்டித்தவாறு பிட மாணவர்களும் தேற்று வெளிநடப்புச் செய்தனர்.

கலைவிழா
ஒத்திவைப்பு
எமது கழகத்தால் 24-05-86 சனிக்கிழமை வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடத்தப்படவிருந்த "கலைவிழா" தவிர்க்க முடியாத காரணத்தால் 31-05-86 சனிக்கிழமைக்குப் பின் போடப்படுகின்றது. 24-05-86 திகதிப்போட்ட பிரசுரம் சிட்டுக்கள் 31-05-86-க்கு செல்லுபடியாகும் என்பதனைப் பணிவன்புடன் தெரியப்படுத்துகின்றோம்.

யாழ். ஆஸ்பத்திரி மீதான தாக்குதல்பற்றி நகாதார பிரிவுக்கு முறையீடு

35வேட்டுக்கள் கூரையைத் துளைத்தன

யாழ்ப்பாணம், மே 21

யாழ் ஆஸ்பத்திரி மீது கடந்த திங்கள் நடந்த ஹெலிகொப்டர் தாக்குதல் குறித்து கொழும்பு சுகாதார அலுவலகத்துக்கு முறையிடப்பட்டது.

உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுவதாக கொழும்பு சுகாதார அதிகாரிகள், யாழ் ஆஸ்பத்திரிக்கு அறிவித்தனர்.

இதனிடையே யாழ் ஆஸ்பத்திரி நிர்வாகம் அரச அதிபர், பிரதேசக் குழு ஆகியோருக்கும் முறையிட்டுள்ளது

இந்த தாக்குதலின் போது 35 துப்பாக்கி வேட்டுக்கள் ஆஸ்பத்திரிக் கூரையைத் தாக்கி வார்டுகளுக்குள் ஊடுருவிச் சென்றன.

இச் சம்பவத்தில் ஒரு நோயாளி காயமடைந்தார். பாரியவைகளோ ஏனையோர் காயமடைந்தனர்.

வயாவிளான்

சென்றவர் வீடு திரும்பவில்லை அரச அதிபரிடம் மனைவி புகார்

நல்லூர், மே 21

விடுவிக்கப்பட்ட ஒன்றை ஒழுங்குசெய்யவே வயாவிளான் சென்றவரைக் காணவில்லை.

இவரது மனைவி சரஸ் எனி யாழ் அரச அதிபரிடம் இதுபற்றி முறையிட்டுள்ளார்

கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுவிக்கப்பட்ட ஒன்றை ஒழுங்கு செய்ய கொழும்பையா ஆனந்தன் என்பவரும் முருகையா என்பவரும் வயாவிளான் நோக்கி வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர்.

நிமலன் வெடிச்சத்தம் கேட்டதாகவும் அதனைத் தொடர்ந்து முருகையா என்பவர் கீழே விழப் பேரட்டுவிட்டுத் தப்பி ஓடிவிட்டார் என்றும் தெரிய வருகிறது.

இதனை அறிந்த இவருடன் சென்ற கொழும்பையா ஆனந்தன் என்பவரை இன்றுவரை காணவில்லை என அரச அதிபரிடம் புகாரிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், விக்டோரா நிலையத்தில், இரண்டாம் மாடியிலுள்ள உதயன் லிமிடெட் (பிரைவேட்) லிமிடெட் அச்சகத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிடப் வெளியிடப்பட்டது.
வெளியிட்ட திகதி: 21 - 05 - 1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd: 14, Second Lane Power House Road, Jaffna.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka, under number [illegible]